**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

## STC.NO- 155/2024
## Dated :28.04.2026
## Deposition of witness for : D.W.1

## Chief Continuation of DW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழ் இனியன் | வயது | : | 33 |
| தந்தை பெயர் | : | தனசேகரன் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | புதுக்கோட்டை | தொழில் | : | இணை கிளை மேலாளர் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1) நான் நீதிமன்றத்தில் ஏற்கனவே சாட்சியம் அளித்த போது கூட்டு வங்கி கணக்கில் உள்ள இருநபர்களில் வழக்கு காசோலையில் யார் கையொப்பயிட்டது என்பது குறித்த ஆவணத்தை தாக்கல் செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. வழக்கு காசோலையில் நூர்ஜகான் கையொப்பமிட்டுள்ளார். மேற்படி கூட்டு வங்கி கணக்கில் நூர்ஜகான் என்பவரின் மாதிரி கையொப்பங்கள் கணினி பதிவிறக்க நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. **(**மேற்படி கூட்டு வங்கி கணக்கில் நூர்ஜகான் என்பவரின் மாதிரி கையொப்பங்கள் கணினி பதிவிறக்க நகல் சா.சா.ஆ.**4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)** பொதுவாக நாமினியாக உள்ள நபர் அந்த வங்கி கணக்கில் பரிவர்த்தனை செய்ய முடியாது என்றால் சரிதான். காசோலையில் உள்ள கையொப்பத்தையும் வங்கி கணக்கு துவக்கப்பட்டபோது கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தில் உள்ள கையொப்பத்தையும் ஒப்பிட்டு பார்த்தால் இரண்டும் ஒரே கையொப்பமா என்று தெரியவரும் என்றால் வங்கி கணக்கில் எப்போது வேண்டுமானாலும் அப்டேட் செய்து கொள்ளலாம். வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் நூர்ஜகானின் கையொப்பம் தான் என்று என்னால் உறுதியாக சொல்ல முடியுமா என்றால் வங்கி கணக்கில் உள்ள மாதிரி கையொப்பத்தை பார்த்து சொல்ல முடியும்.

2) மேற்படி வங்கி கணக்கு துவக்கப்பட்டது 07.12.2001 என்றால் சரிதான். மேற்படி வங்கி கணக்கு mvsirajudeen@gmail.com என்ற மின்னஞ்சலுடன் இணைக்கப்பட்டுள்ளது என்றால்

சரிதான். வழக்கு காசோலை அதில் உள்ள கையொப்பம் மாறுபட்டுள்ளதாக கூறி திருப்பி இருக்க வேண்டும் என்றால் சரியல்ல. அது வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்பதால் திருப்பப்பட்டுள்ளது. காசோலையில் உள்ள கையொப்பம் சரியாக இருந்தது. வழக்கு காசோலையில் Lakshs என்பது லட்சத்தை குறிக்காது என்றாலும் Lakhs என்பது தான் லட்சத்தை குறிக்கும் என்றாலும் சரியல்ல. எண்ணால் ரூ.5,00,000/- குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி எழுத்து பிழையை நாங்கள் கவனிக்கவில்லை என்றால் தொகை எண்ணால் சரியாக குறிப்பிடப்பட்டிருந்ததால் எழுத்து பிழையை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. எழுத்து பிழைக்காக திருப்புதல் குறிப்பாணை வழங்கப்படவில்லை என்றால் சரிதான். வங்கி கணக்கில் போதிய பணமில்லை என திருப்புதல் குறிப்பாணை கொடுக்கப்பட்டுள்ளது. வழக்கு காசோலையில் எண்ணால் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் ரூ.5,00,000 என்பதற்கு பிறகு (/-) என்ற குறியீடு எழுதப்படவில்லை என்றால் சரிதான்.

3)மேற்படி வங்கி கணக்கில் ரூ.5,00,000/- மிகாமல் தான் நடைபெற்றுள்ளது என்றால் மொத்த வங்கி கணக்கு அறிக்கையை பார்த்தால் தான் சொல்ல முடியும். வழக்கு காசோலையில் சிராஜுதீன் கையொப்பம் இல்லை என்றால் சரிதான்.

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

கற்றறிந்த புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.04.28 16:01:29 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**